Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

1. 1. ஆங்கிலேயர்கள் தங்களின் நலனுக்காக கற்றறிந்த இந்திய நடுத்தர வர்க்கத்தை உருவாக்கினார்கள்.
   2. அதை "பாபு வர்க்கமென" ஏளனப்படுத்தினார்கள்.
   3. பின்னர் அந்த வர்க்கத்தினரே இந்தியாவின் புரட்சிகர முற்போக்கான படித்த வர்க்கமாக மாறி விடுதலைக்கு மக்களைத் திரட்டினர்.
   4. ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட இந்நவீன சமூக வர்க்கம் இந்தியாவில் வணிக வர்த்தகச் சமூகங்கள், நிலப்பிரபுக்கள், லேவாதேவி செய்வோர் ஆங்கிலம் பயின்ற ஏகாதிபத்திய அரசின் துணை நிர்வாகப் பிரிவுகளில் பணியமர்த்தப்பட்டோர், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாய் இருந்தது.
   5. மேற்சொல்லப்பட்ட வர்க்கங்களை சேர்ந்த மக்கள் ஏனைய மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்த்தெடுப்பதில் சிறப்பான பங்காற்றினர்.
   6. நவீன இந்தியக் கற்றறிந்தோர் பிரிவைச் சேர்ந்த ராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் இந்திய அரசியல், சமுதாய, மத, இயக்கங்களுக்குத் தலைமையேற்றனர்.
   7. மேலை நாட்டு அறிஞர்களான ரூஸோ, கரிபால்டி, மார்க்ஸ் ஆகியோர்களால் சோசலிசம் போன்ற தத்துவக் கருத்துக்களைக் கற்றறிந்த இந்தியர்கள் அறிந்து கொண்டனர்.
2. 1. 1875 க்கும் 1885 க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் ஆங்கிலேயரின் கொள்கைக்கு எதிராக பல போராட்டங்கள் நடைபெற்றன.
   2. 1877 இல் அரசுப் பணிகள் இந்திய மயமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஒங்கி ஒலித்தது.
   3. இந்திய தேசிய காங்கிரஸ் "இந்தியா ஒரே நாடு" எனும் கருத்து அவ்வமைப்பின் பெயரில் பிரதிபலித்தது.
   4. இந்திய தேசியக் காங்கிரஸ் 1885 டிசம்பர் 28-இல் பம்பாயில் உருவாக்கப்பட்டது.
   5. W.C. பானர்ஜி இவ்வமைப்பின் முதல் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.
   6. இவ்வமைப்பு தேசியவாதம் எனும் கருத்தையும் அறிமுகம் செய்தது.
   7. இந்தியரை ஒரே நாடாக ஒருங்கிணைப்பதே இந்திய தேசிய காங்கிரசின் இன்றியமையா நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.
   8. இந்தியர்கள் தாங்கள் அனைவரும் ஒரே நாட்டின் குடிமக்கள் என உணர்ந்தால் மட்டுமே காலனியாட்சிக்கு எதிரான போராட்டங்கள் வெற்றி பெறுமென்பதை இந்திய தேசிய காங்கிரஸ் நிர்வாகிகள் நன்குணர்ந்தனர்.
   9. பிபின் சந்திரபால், பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்ற ஆரம்பகால தேசியவாதிகள் மனுக்கள் எழுதுவது, மன்றாடிக் கேட்டுக்கொள்வது போன்றவற்றிற்கு மாறாக தீவிரமான அணுகுமுறைகளை பரிந்துரைத்தனர்.
3. 1. சென்னைவாசிகளின் சங்கத்தின் மனு 1853 மார்ச்சில் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.
   2. இந்திய சீர்திருத்த தலைவரான H.D. செய்மோர் 1853 அக்டோபரில் சென்னை வந்தார்.
   3. குண்டூர், கடலூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களைப் பார்வையிட்டார்.
   4. 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் கிழக்கு இந்திய கம்பெனி தொடர அனுமதி வழங்கியது.
   5. இந்தியாவிலுள்ள ஆங்கிலேயருக்கு சொந்தமான பகுதிகள் மகாராணியாரின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு மாற்ற வேண்டும் என்று கூறியது.
4. 1. ஆங்கில பேரரசின் காலனி பகுதியான இலங்கையின் ஆளுநர் 1815-இல் சென்னை மாகாண ஆளுநருக்கு கடிதம் எழுதினார். அதில் பெருந்தோட்டங்களில் வேலை செய்யக் கூலிகளை அனுப்பிவைக்க கேட்டுக்கொண்டார்.
   2. 1833, 1843 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சங்கள், அரசின் தூண்டுதல் இல்லாமலேயே மக்கள் புலம் பெயர்ந்து செல்லக் கட்டாயப்படுத்தின.
   3. 1837 இல் தமிழ்நாட்டிலிருந்து குடிபெயர்ந்து இலங்கையில் காபித்தோட்டங்களில் சுமார் 10,000 தொழிலாளிகள் வேலை செய்தனர்.
5. 1.சென்னையில் உள்ள மிக முக்கியமான வணிகர் கஜீலா லட்சுமி நரசு ஆவார்.
   2.சென்னை வாசிகள் சங்கம் எனும் அமைப்பு உருவாவதற்கு உந்து சக்தியாக திகழ்ந்தவர்.
   3.இவ்வமைப்பு சென்னை மாகாணத்தைச் சேர்ந்த நிலவுடமை வணிக வர்க்கத்தினரின் அமைப்பாகும்.
6. ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.O. Hume) எனும் பணி நிறைவு பெற்ற இந்தியக் குடிமைப் பணி (Indian Civil Service - ICS) அதிகாரி டிசம்பர் 1884இல், சென்னையில் பிரம்மஞான சபையின் கூட்டமொன்றிற்குத் தலைமை ஏற்றிருந்தார். இக்கூட்டத்தில் அகில இந்திய அளவில் செயல்படும் ஒரு அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பாக விவாதிக்கப்படுகையில் இந்திய தேசிய காங்கிரஸை உருவாக்குவது எனும் கருத்து உருவானது. இந்திய தேசிய காங்கிரஸ் 1885 டிசம்பர் 28இல் பம்பாயில் உருவாக்கப்பட்டது. A.O. ஹியூம் தவிர இவ்வமைப்பை உருவாக்கிய முக்கிய உறுப்பினரான W.C. பானர்ஜி இவ்வமைப்பின் முதல் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.
7. **தேசியம்:** விரிவான தளத்தில் தேசியமென்பது ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. அது தனது நாட்டை ஏனைய நாடுகளைக் காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்து அல்லது ஏனைய நாடுகளுக்குப் போட்டியாக தனது நாட்டின் பண்பாடும் மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்தும் ஒரு தேசிய உணர்வு அல்லது மனப்போக்காகும்.
8. 1. 1859-60 இல் நடைபெற்ற "இண்டிகோ" புரட்சி கம்பெனியின் அடக்குமுறைக் கொள்கைக்கு எதிரான இந்திய விவசாயிகளின் ஒரு எதிர் வினையாகும்.
   2. ஐரோப்பியர்களுக்குச் சொந்தமாயிருந்த நிலங்களில் இந்தியக் குத்தகை விவசாயிகள் அவுரியைப் பயிரிடக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
   3. சாயம் தயாரிக்க இச்செடிகள் அதிகம் தேவைப்பட்டது.
9. 1. இந்திய மக்களிடையே நவீனக் கல்வியைக் கற்றுக்கொடுக்க மேற்கொள்ளப்பட்ட தொடக்ககால முயற்சிகளிலொன்று கிறித்துவ சமயப்பரப்பு நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டதாகும்.
   2. மரபு சார்ந்த கல்வி முறையில், கல்வி கற்பதற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட அடித்தட்டு மக்களுக்கும், விளிம்பு நிலை மக்களுக்கும் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை சமயப்பரப்புக் குழுக்கள் வழங்கின.
10. 1. தேசியத்தின் குறிக்கோளானது இந்தியச் சிந்தனையை, இந்திய குணநலன்களை, இந்திய உணர்வுகளை, இந்திய ஆற்றலை, இந்தியாவின் உன்னதத்தை மீட்டெடுப்பதாகும்.
    2. மேலும் உலகைத் தடுமாறச் செய்யும் பிரச்சினைகளை இந்திய மனப்பாங்குடன் இந்திய நிலைப்பாட்டில் தீர்த்து வைப்பதாகும் என அரவிந்த கோஷ் எழுதினார்.
11. காலனிய காலத்திற்கு முந்தைய இந்தியாவில் கல்வியானது சாதி, மத அடிப்படையில் துண்டுபட்டிருந்தது. இந்தியர்களிடையே, பிராமணர்கள் உயர்நிலை சார்ந்த சமய, தத்துவ அறிவினைப் பெறும் தனியுரிமையைப் பெற்றிருந்தனர். கல்வியைத் தங்களின் முற்றுரிமையாக்கிக் கொண்ட அவர்கள் பிரதானமாக அர்ச்சகர்களாகவும் ஆசிரியர்களாகவும் சமூகத்தில் அங்கம் வகித்தனர். வித்யாலயங்கள், சதுஸ்பதிகள் என்றழைக்கப்பட்ட உயர்தரக் கல்வி பயின்றனர்.

12. (a) 1915
13. (b) 1835
14. (a) பாலகங்காதர திலகர்
15. (c) தாதாபாய் நௌரோஜி
16. (c) கோகலே
17. (a) 1600
18. (a) நேரு
19. (b) சுரேந்திர நாத் பானர்ஜி
20. (a) அரசியல் அமைப்பு
21. (c) தாதாபாய் நௌரோஜி

QB 365 Study Material
QUESTION BANK 365